RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1626

# மதுரை அணைக்கரைப் பட்டி வட்டார மக்களின் நாட்டுப்புற மருத்துவ முறைகள்

**கா. காமராஜ்** [அ, *]

[அ] சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600113, தமிழ்நாடு, இந்தியா

# Medicines Used by the People of Anaikaraipatti in Madurai for Children and Elders

**K. Kamaraj** [a, *]

[a] Department of Sociology, Arts and Culture, International Institute of Tamil Studies, Taramani, Chennai-600113, Tamil Nadu, India

* Corresponding Author: lingukamaraj@gmail.com

Received: 29-06-2022
Revised: 07-09-2022
Accepted: 03-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Siddha medicine are used by the people traditionally to cure disease. Usually the people live around village don't spend money for medicines. Instead they use the leaves and other medicinal herbs which grow in their village. By knowing the medicinal properties, they cure various diseases. They cure many diseases using this medicine. This type of Siddha medicines is still in use among village people. So, this Article is about the medicinal herbs and how these herbs cure the disease among the children and elders.

**Keywords:** Traditional Medicine, Siddha Medicine, Children and Elders.

## முன்னுரை

நாட்டுப்புற மருத்துவம் என்பது நாட்டுப்புற மக்களிடையே மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு வரும் மருத்துவமுறைகளாகும். பெரும்பாலும் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்ற மக்கள் பொருட்செலவு எதுமே இல்லாமல் தங்களின் வாழ்விடங்கள் மற்றும் வயல் வெளிகளில் இயற்கையாக வளர்ந்து இருக்கும் மருத்துவம் குணம் கொண்ட இலைகள் செடி, கொடிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி அதன் மருத்துவ குணம் அறிந்து மனிதர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு நோய்களை குணமாக்கி வருகின்றனர். இத்தகைய நாட்டுப்புற மருத்துவம் என்பது இன்றளவும் கூட கிராமங்களில் பயன்பாட்டில் உள்ளன (Sakthivel, 1983). அந்த வகையில் நாட்டுப்புற மக்களிடம் நேரடிக் கள ஆய்வு மேற்கொண்டு குழந்தைகள், பெரியவர்களுக்கு ஏற்படும் நோய்களும் அதனை குணமாக்கக்கூடிய மருத்துவ முறைகள் குறித்தும் விரிவாக விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஆய்வின் பயன் கருதுகோள்

காலம் காலமாக நாட்டுப்புற மக்களிடையே மரபு தொட்டு பல்வேறு நோய்களுக்கு தீர்வு காணும் வகையில் அவர்கள் பின்பற்றி வந்த கை மருத்துவ முறைகள் பற்றியும் அதன் பயன்பாடுகள் குறித்தும் விளக்குவதே இந்த ஆய்வின் பயனாகும். நாட்டுப்புற மக்களிடையே வாய்மொழியாகவே இன்றும்

சொல்லப்பட்டு வருகின்ற நாட்டுப்புற மருத்துவ முறைகள் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த தெளிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் கருதுகோள் ஆகும் (Sakthivel, 1983).

## நாட்டுப்புற மருத்துவ முறை விளக்கம்

ஒவ்வொரு சமுதாயமும் தனக்கென சில மருத்துவ முறைகளைக் கொண்டு விளங்குகின்றது. இதனை சமூக நிறுவனம் என்றும் சொல்லலாம். நோய்களும், மருத்துவமும் மனித பண்பாட்டோடு பிரிக்க முடியாத ஒன்றாகும். நாட்டுப்புற மக்கள் கையாளுகின்ற மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்று அழைக்கப்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் folk medicine, ethno medicine, popular medicine, popular health culture ethnicity என பல பெயர்களில் ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். நாட்டுப்புற மருத்துவம் என்பது மிக பழமையான மருத்துவ முறைகள் என்றும் கூறுவர். அறிவியல் நாகரிகம், இயந்திர வளர்ச்சிப்பெற்ற இந்த காலத்திலும் கூட கிராமப்புறங்களில் நாட்டுப்புற மருத்துவ முறைகள் என்பவை இன்றும் கூட பயன்பாட்டில் உள்ளன. இவ்வாறு நாட்டுப்புற மருத்துவ முறைகள் குறித்து விளக்கப்படுகிறது (Sakthivel, 1983).

## குழந்தைகளுக்கான மருத்துவ முறைகள்

இயற்கையாக பிறந்தது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய நோய்கள் மற்றும் அதனை தீர்த்து வைக்கக்கூடிய மருத்துவ முறைகள் பற்றி பின்வருமாறு விளக்கப்படுகிறது (Pratap Singh, 2018).

### செரிமான பிரச்சனை நீங்க

பிறந்து 30 நாள் ஆன குழந்தைக்கு ஏற்படும் உண்டாகும் செரிமானம் பிரச்சனை போக்குவதற்கு கோழியின் இரைப்பெட்டியில் இருக்கும் கல்லை எடுத்து தாய்ப்பாலில் உரசி சங்கில் வைத்து கொடுத்து வர குழந்தைக்கு செரிமான பிரச்சனை என்பது சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### தலைவலி குணமாக

சின்ன குழந்தைகளுக்கு தலைவலி ஏற்பட்டால் செந்தூரத்தை சூடு தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்த பின்பு ஆற வைத்து அதனை குழப்பி நெத்தியில் பூசி வர தலைவலி குணமாகி விடுகிறது (Pratap Singh, 2018).

### சளிப்பிரச்சனை தீர

குழந்தைகளுக்கு சளிப் பிடித்தால் கேப்ப மாவை வாயில் மெண்டு குழந்தையின் உச்சந்தலையில் பூசி வர சளி பிரச்சனை தீர்ந்துவிடும் (Pratap Singh, 2018).

### ஒரம் விழுந்தல் நீங்குவதற்கு

குழந்தையின் உடலில் விளக்கு எண்ணெய்யை உச்சி முதல் பாதம் வரை தடவி பின்பு புளிய மரத்தின் இலையை வெள்ளை வேட்டியில் போட்டு மாமன் முறை உள்ளவர்கள் இருவர் சேர்ந்து வேட்டியில் குழந்தையைப் படுக்க வைத்து இரண்டு மூன்று முறை உருட்டி வந்தால் ஒரம் விழுவது நின்று விடும். இவ்வாறு காலை மாலை இரண்டு வேலைச் செய்து வர வேண்டும் (Thirugnnam, 1992).

### இருமலைப் போக்க

தூதுவளை இலையைப் பிடுங்கி சார் எடுத்து இரண்டு சொட்டு பன்னருவாலை சாற்றில் தொட்டு விட்டப் பிறகு குழந்தைகளுக்கு சங்கில் ஊத்தி ஊட்டி விட வேண்டும். இவ்வாறு செய்வதால் இருமல் பிரச்சனை தீர்ந்துவிடும் (Pratap Singh, 2018).

### வயிற்று வலி தீர

பெருங்காயத்தை உரசி தாய்ப்பாலில் கலந்து சங்கில் வைத்து கொடுத்து வர குழந்தைகளுக்கு வயிற்று வலி நின்று விடும் (Pratap Singh, 2018).

### விக்கலைப்போக்க

பிறந்த குழந்தைகளுக்கு அடிக்கடி உண்டாகும் விக்கலைப் போக்க பச்ச இலையைப் பிடுங்கி தலை உச்சியிலும், நெஞ்சிலும் வைத்து ஒட்டி வர அடிக்கடி வருகின்ற விக்கல் நின்று விடும் (Pratap Singh, 2018).

### தேரப்பிள்ளை நோயினைப்போக்க

தேரை விழுந்த குழந்தைகளுக்கு தேரையைப் பிடித்து (தவளை) மாட்டுத்தோலால் ஆன வாரில் வைத்து தைத்து குழந்தையின் அறைஞான் கயிற்றில் கட்டி விட்டு வர தேரப்பிள்ளை நோய் நீங்கி விடும் (Pratap Singh, 2018).

### கக்குவான் இருமல் சரியாக

இந்த இருமலுக்கு புங்க மரத்தின் காயினையும் சுடு காட்டில் குடம் ஒடைக்கும் மண் பானை ஓட்டினையும் வைத்து இரண்டையும் சேர்த்து துணியில் வைத்து குழந்தையின் கழுத்தில் கட்டி விட வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கக்குவான் இருமல் நோய் என்பது சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### தொப்பூல் வீக்கம் சரியாக

சுடு மாடு கட்டி தண்ணீர் பானையைக் கொண்டு வருவதற்காக தலையில் வைக்கப்படும் துணியால் ஆன சுடுமாட்டினை எடுத்து குழந்தையின் தொப்பூலில் வைத்து தடவி ஒத்தடம் செய்து வந்தால் தோப்பூல் வீக்கம் சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### உடல் சூடு தனிய

உடல் சூடு குழந்தைகளுக்கு அதிகமானால் வெந்தயத்தை ஊர வைத்து அதனை தலையில் தடவி குளிப்பாட்டி வர உடல் சூடு தனிந்து விடும் (Pratap Singh, 2018).

### வயிற்றுப்போக்கு நீங்க

வயிற்றுப்போக்கினைச் சரியாக்குவதற்கு கல் உப்பினை சுடு தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து ஆரியபின்பு சர்க்கரையைச் சேர்த்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் வயிற்றுப்போக்கு சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### தொக்கம் விழுதல் குணமாக

தைவயிலை என்ற செடியின் இலையைப் பிடுங்கி அதனை கசக்கி குழந்தைகளின் இரண்டு காதுகளிலும் சிறிது ஊற்றி பஞ்சு வைத்து அடைத்து விட வேண்டும். இவ்வாறு செய்து வர தொக்கம் விழுந்தல் சரியாகி விடும் (Thirugnnam, 1992).

### சீர் அடித்தல் சரியாக

குழந்தைகளுக்கு சீர் அடித்தால் சீர் பச்சை என்ற இலையினை பிடுங்கி அதனை வெள்ளை துணியில் வைத்து அரைஞான் கயிற்றில் வைத்து குழந்தைகளுக்கு உடுப்பில் கட்டி வர சீர் அடித்தல் என்பது சரியாகி விடும் (Thirugnnam, 1992).

### குடல் விழுவது சரியாக

குழந்தைகளுக்கு கொடல் விழுந்தால் கையை வைத்து அடிவயிற்றில் மெல்ல தட்டி விட கொடல் விழுதல் சரியாகி விடும். இதனை காலை மாலை இரண்டு வேலை செய்து வர கொடல் விழுதல் நோய் குணமாகி விடும் (Thirugnnam, 1992).

### குழந்தைகள் பால் அருந்தாமல் மெலிந்து காணப்படுவதைப் போக்க

அடிக்கடி குழந்தைகள் பால் குடிக்காமல் மெலிந்து காணப்படுவார்கள் அதனை போக்குவதற்கு சங்கு இலை, மொடக்கத்தான் இலை, வேட்ட இலை இந்த மூன்று இலைகளையும் வெளக்கு எண்ணெயில் வேக வைத்து அதனை ஆற வைத்து பின்பு சங்கில் வைத்து ஒரு வேலை மட்டும் கொடுத்து வந்தால் குழந்தைகள் பால் அருந்தாமல் மெலிந்து காணப்படும் நோய் சரியாகி விடும் (Thirugnnam, 1992).

### குழந்தைகளுக்கு எந்த நோயும் வராமல் தடுக்க

பிறந்த குழந்தைகளுக்கு எந்த நோயும் வராமல் இருக்க பிள்ளை வளத்தி என்ற இலையையும், மஞ்சளையும் சேர்த்து இரண்டையும் காய வைத்து பொடியாக்கி நீரில் கலந்து குளிப்பாட்டி தலையில் தேய்க்காமல் உடலில் மட்டும் வைத்து தேய்த்து குளிப்பாட்டி வர சின்ன குழந்தைகளுக்கு எந்த நோயும் வராது (Thirugnnam, 1992).

### பெரியவர்களுக்கான மருத்துவ முறைகள்

இயற்கையாகவே கிராமப்புறங்களில் வாழ்கின்ற பெரியவர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவ முறைகள் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கப்படுகிறது (Thirugnnam, 1992).

### வாயுத் தொல்லையினைப் போக்க

வாயுத் தொல்லையினை போக்குவதற்கு வேளிப்பருத்திக் காயினை பிடுங்கி அதில் உள்ள விதையை எடுத்து விட்டு அதனை பொறியல் செய்து சாப்பிட்டு வந்தால் வாயுத் தொல்லை நீங்கி விடும் (Thirugnnam, 1992).

### காது வலி நீங்க

காது வலிக்கு வலம் புரி இடம் புரி என்று சொல்லக் கூடிய காயினை எடுத்துக் கொண்டு அதில் வலம் புரி காயினை வலது காதில் இடுவதற்கு தேங்காய் எண்ணெயில் வேக வைத்து ஆரிய பின்பு

அதனை இரண்டு சொட்டு விட வேண்டும். அதே போல் இடது காதுக்கு இடம் புரி காயினை தேங்காய் எண்ணெயில் வேக வைத்து ஆரிய பின்பு இடது காதில் ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்து வர காது வலி என்பது நீங்கி விடும் (Thirugnnam, 1992).

### முழங்கால் வலி சரியாக

முழங்காலில் ஏற்படும் வலியினை சரியாக்குவதற்கு முடக்கத்தான் இலையைப் பிடுங்கி அதனுடன் சின்ன வெங்காயம் சேர்த்து நன்றாக அறைத்து முழங்காலில் காலை, மாலை இரண்டு வேலை பூசி வர முழங்கால் வலி சரியாகி விடும் (Thirugnnam, 1992).

### தலைமுடி உதிர்வதை தவிர்க்க

தலை முடி உதிர்வதை தவிர்ப்பதற்கு ஓணானைப் பிடித்து அதன் இரத்தத்தை எடுத்து தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தேய்த்து வர தலை முடி உதிர்வது நின்று விடும் (Pratap Singh, 2018).

### மூல நோய் குணமாக

மூல நோய் குணமாக தைவ இலையையும், சின்ன வெங்காயத்தையும் சேர்த்து அரைத்து உருண்டை தெரட்டி ஆசனவாயில் வைத்து வர மூல நோய் நீங்கி விடும் (Pratap Singh, 2018).

### சொரிசிரங்கினைப் போக்க

சொரிசிரங்கினைப் போக்குவதற்கு செந்தட்டி இலையையும் சின்ன வெங்காயத்தையும், சீரகத்தையும் சேர்த்து இடித்து சாறு பிளிந்து குடித்து வந்தால் சொரி சிரங்கு நீங்கி விடும் (Thirugnnam, 1992).

### நீர்க்கட்டு நோய் குணமாக

கசகமிட்டி என்ற காயினை பிடுங்கி அதனை அடுப்பில் வாட்டி எடுத்து காலில் ஒத்தடம் கொடுத்து வர நீர்க்கட்டு நோய் சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### வயிற்றுவலி தீர

வயிற்றுவலி தீர வெற்றிலையோடு உப்பு வைத்து மென்று திண்ண வேண்டும். அதன் பிறகு வடிக்கட்டிய கஞ்சித் தண்ணீரைக் குடிக்க வேண்டும் இவ்வாறு குடித்து வர வயிற்று வலி நீங்கி விடும் (Pratap Singh, 2018).

### பல்வலி தீர

பல்வலியினைப் போக்குவதற்கு கண்ட கத்திரிக்காயினை பிடுங்கி அடுப்பில் சுட்டு அதன் வெதையை எடுத்து உள்ளங் கையில் நல்ல எண்ணெய் விட்டு பிசைந்து பல்வலி இருக்கும் இடத்தில் வைத்து வர பல்வலி சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### கல்லடைப்பான் சரியாக

கல்லடைப்பான் நோய் சரியாவதற்கு ஆனை நெரிஞ்சி செடியினைப் பிடுங்கி அதனை கஞ்சி தண்ணீரில் ஊற வைத்து காலை மாலை குடித்து வர கல்லடைப்பான் நோய் சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### உடல் சூடு தனிய

உடல் சூடு தனிவதற்கு சோத்துக்கத்தாழையைப் பிடுங்கி அதில் உள்ள சதையினை எடுத்து சர்க்கரையைச் சேர்த்து உண்டு வர உடல் சூடு தனிந்து விடும் (Pratap Singh, 2018).

### கைகால் சுளுக்கு சரியாக

கைகால் சுளுக்கு நீங்குவதற்கு விளக்கு எண்ணெயை தடவி வந்தால் கைகால் சுளுக்கு சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### இரத்தக்கட்டு நீங்க

உடலில் உண்டாகும் காயத்தினால் ஏற்படும் இரத்தக் கட்டினை நீக்குவதற்கு மஞ்ச நெத்தி இலையுடன் சின்ன வெங்காயம் சேர்த்து அதனை நல்ல எண்ணெயில் போட்டு வதக்கி காலை மாலை இரண்டு வேலை ஒத்தடம் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்து வந்தால் இரத்தக் கட்டு சரியாகி விடும் (Pratap Singh, 2018).

### வயிற்றுக் கிருமி நீங்க

சுண்டக்காயினை வதக்கி வெஞ்சனம் செய்து உண்டு வர வயிற்று கிருமி நீங்கி விடும் (Pratap Singh, 2018).

## முடிவுரை

நாட்டுப்புற மக்களால் கையாளப்படுகின்ற நாட்டுப்புற மருத்துவ முறைகள் என்பவை இன்றும் கூட மக்களிடையே நடைமுறையில் உள்ளன. இத்தகைய இயற்கை சார்ந்த மருந்துவம் என்பது எந்த வித பக்க விளவுகளும் இல்லாமல் இருக்கின்றன. இதனை பரம்பரை வைத்தியம், பாட்டி வைத்தியம், மூலிகை வைத்தியம் என்றும் பல்வேறு பெயர்களில் அழைத்து வருகின்றனர். இவ்வாறு பல்வேறு மருத்துவ குணம் உடைய இத்தகைய நாட்டுப்புற மருத்துவம் என்பது இன்று அழிந்து மறைந்து வருகின்றன. இவற்றை அழியாமல் பேணிக்காப்பது நம் கடமை ஆகும். நாட்டுப்புற மருத்துவ முறைகள் மற்றும் அதனால் குணம் ஆகக்கூடிய நோய்கள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்வோம் என்றால் பல்வேறு அறிய பெரும் தகவல்கள் நமக்கு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இதனை மீட்டுருவாக்கம் செய்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதே நமது கடமையாகும்.

## References

Pratap Singh, (2018) Arunthamil maruthuvam 500, International Institute of Tamil Studies, Chennai, India.

Sakthivel, S. (1983) Naattuppura eyal aaivu, Manivasagar publications, Chennai, India.

Thirugnnam, (1992) Mulikai Maruththuvam, Selvi PAthippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License